திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு முடிவெடுக்கிற வரையில் உள்ள இடைக் காலத்திலே கடன் வழங்கியாவது வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலமாக நலிவுற்றவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கும் கடன் கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் கட்டுதல்.

201—(* வினா எண். 555) திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் வட்டம், பிலாவடி, புளியஞ்சேரி, விக்ரபாண்டியம் கிராமங்கள் பாசனம் பெறும் பிலாவடி வாய்க்கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் (Bed dam) கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

(இ) மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) பெட் டேம் கட்டும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தில் பிலாவடி, மேலராமன்சேட்டி, புளியஞ்சேரி, விக்கிரபாண்டிபுரம், மேலப்பிடாகை ஆகிய

1989 மே 4]

கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் முடிகொண்டான் ஆற்றில் புளியஞ்சேரி வாய்க்கால் ஆற்றில் தலைப்பில் பெட் டாம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று பல முறை அப்பகுதி விவசாயிகள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று அரசு பெட் டாம் கட்டிக் கொடுக்க ஆவன செய்யுமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கிராமங்கள் எல்லாம் ஏற்கெனவே முடிகொண்டான் ஆற்றில் உள்ள பிலாவடி ரெகுலேட்டர் மூலம் அதாவது நீர்கண்டிகை மூலம் பாசன வசதி பெறலாம் என்கிற நிலை இருக்கிறது. எனவேதான் அவர் குறிப்பிட்ட அந்த இடத்தில் பெட் டாம் கட்டுகிற செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் அந்த இடத்தை ஆய்வு செய்து இது பயனுள்ள, தேவையான திட்டம் என அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்து அந்தப் பயனுள்ள திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, பொதுவாகவே தஞ்சை மாவட்டத்திலே ஆறுகளில் பல இடங்களில் படுகைகளில் நீர் கண்டிகைகள் கட்ட வேண்டும் என்று கோரிக்கைகள் பல வந்திருக்கின்றன. அவைகளைக் கட்டுகிறபோது பாசனப் பங்கீட்டு முறையில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே தான் ஒவ்வொரு ஆறாக எடுத்துக் கொண்டு அந்த ஆற்றைப் பற்றி ஆராய்ந்து அங்கே பெட் டாம் கட்டலாமா, ரெகுலேட்டர் கட்டலாமா என்று ஆராய்ந்து ஆய்வு செய்ய அரசு

பணித்திருக்கிறது. அந்த வகையிலே முதலாவதாக முடிகொண்டான் ஆறு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடமும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும். அதுவும் ஆய்வில் இருக்கின்றது. ஆய்வு முடிந்த பிறகு, சாதகமான சூழ்நிலை ஏற்படுமாயின் அவர்கள் விரும்பிய வண்ணம் அங்கே ஒரு 'பெட் டாம்' கட்டப்படும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

எட்டுகுடியில் வடிகால் கட்டுதல்

202—(*வினா எண். 840) (திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எட்டுகுடியில் வடிகால் வெட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுக் குடியில் வடிகால் வெட்ட திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எட்டுக்குடி வடிகால் சம்பந்தமாக 1984—வது ஆண்டில் காவிரி சீரமைப்பு கோட்டத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு செக்கிலியான் வாய்க்காலுடன் இணைப்பது என்று திட்டம் தயாரிக்கப்பட்டு செயல் படாமல் இருக்கின்றது. இந்த திட்டத்தை அரசு மேலும் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத்திட்டத்திற்கு 1986—87 ஆம் ஆண்டு கடைமடை பகுதியிலிருந்து பாப்பனார் வடிகால் வரை ரூ. 5.50 லட்சம் செலவில் மேம்பாட்டு பணிகள் மற்றும் கீழ்குமிழ் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வடிகால் அபிவிருத்தி செய்தபோதிலும் மழைக்காலங்களில் தண்ணீரை வெளியேற்றுவதிலே ஒரு பெரும் பிரச்சினை இருக்கின்றது. எனவே தான் அந்தப் பிரச்சினை தீர அந்தக் கிராமத்து மக்கள் அந்தப் பகுதியிலே உள்ள சிவன் கோட்டம் வடிகாலையும் மேம்பாடு